**அலகு - 3**

## இரண்டு மதிப்பெண் வினா - விடைகள்

**1/ சிறந்த பேச்சாளர் யார்?**

குறைந்த கூட்டத்தைக் காட்டிலும் மக்கள் நிறைந்த கூட்டத்தில் பேசுவதுதான் உற்சாகத்தை அளிக்கும். தன் நாவைக்கண்டு அஞ்சக்கூடியவனே சிறந்த பேச்சாளனாக விளங்க முடியும்.

**2. மேடையில் பேச்சாளர் தவிர்க்கப்படவேண்டியவை யாவை?**

1. அச்சத்தை நீக்குதல்
2. குறிப்பை பார்த்துப்படித்தல்
3. குறிப்பெடுக்காமல் மேடையில் தடுமாறுதல்
4. குறித்த நேரத்திற்கு மேல் பேசுதல்
5. நாகரிகமற்ற சொற்களை, பொருள்களை பயன்படுத்துதல்
6. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே முடித்தல்

போன்ற செயல்பாடுகளை பேச்சாளன் மேடையில் தவிர்க்கவேண்டும்.

**3/ பேச்சாளனின் தலைசிறந்த பண்பு எது?**

அவைக்கு மரியாதை செலுத்தி தன் பேச்சைக் கேட்போரின் உள்ளங்களில் குடிபுகும் ஆற்றல் உடையவரின் பண்பு தலைசிறந்த பண்பாக போற்றப்படும்.

**4./ பேச்சாளனுக்குரிய அறிவு எவ்வாறு அமையவேண்டும்?**

தலைசிறந்த பேச்சாளர்கள் பல்துறை அறிவில் சிறந்து விளங்குவர். பேச்சாளனுக்கு இலக்கியம் மட்டும் போதுமானதல்ல. உலகிலுள்ள அனைத்து துறைகளின் அறிவும் ஒருசேரப் பொருந்தியிருப்பவனே தலைசிறந்த பேச்சாளனாக விளங்க முடியும்.

**5/ பேச்சாளனுக்குரிய தன்னம்பிக்கையை வரையறு?**

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே உண்டாகும் என்ற வரிகளுக்கேற்ப உள்ளமும் நாவும் ஒன்றானால் உரையும் செயலும் ஒன்றாகும் என்ற வரிகளை ஒவ்வொரு பேச்சாளனும் மனதில் நிறுத்திச் செயல்பட்டால் தன்னம்பிக்கை தானாய் பிறக்கும். மேடைப் பிரச்சனைகளைத் தீர்க்க தன்னம்பிக்கை ஒன்று மட்டுமே சிறந்த வழியாகும்.

**6/ மேடைப்பேச்சின் வரலாறு குறித்து எழுதுக.**

மேடைப்பேச்சின் பிறப்பிடம் கிரேக்கம்.



மேடைப்பேச்சு, தமிழ் நாட்டிற்கு இறக்குமதியான சரக்கல்ல. கிரேக்கர்களுக்கும், ரோமானியர்களுக்கும் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல தமிழர்கள். ரோமானியர்களும் கிரேக்கர்களும், அரசியல், தத்துவம், தர்க்கம் ஆகிய துறைகளில் பேச்சுக்கலையை அதிகமாகக் கையாண்டனர்; தமிழர்கள் இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் அதிகமாகப் பயன்படுத்தினர். பண்டைத் தமிழ் வேந்தர்களின் அவைக்களம் ஒவ்வொன்றும் சொற்போர் மன்றமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது. வாள்வலிமையும் தோள்வலிமையும் மட்டுமல்ல; சொல்வலிமையும் கொண்ட வேந்தர்கள், சிங்காதனத்தை அலங்கரித்தனர். அவைக்களத்தில் அறிஞர்களும் புலவர்மாணிகளும் இலக்கியம், சமயம் ஆகியவற்றைக் குறித்து விவாதித்தனர். கவிஞர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் அரங்கேற்றப்பட்டன.

சான்றோர்கள் வீடுகளில் விருதுக்கொடிகளைப் பறக்க விட்டிருந்தனர். சொற்போரில் வென்றார்கள். கொடிகட்டி வாழ்ந்தனர். போர்க்களம் நோக்கிப் பாய்ந்து செல்லும் வீரர்களை வேந்தர்கள் வீரகர்ஜனை புரிந்து எழுச்சி தந்து ஊக்கம் ஊட்டினர்.

தமிழ்ப் புலவர்கள் பேச்சுக்கலையில் கைதேர்ந்த விற்பன்னர்கள். வேந்தர்களிடையேயுள்ள பூசல்களைச் சாதுரியமான பேச்சுவன்மையால் களைத்தெறிந்தனர். மன்னர்களிடையே அன்பையும் தோழமையையும் வளர்த்தனர். தமிழ் இலக்கியங்களில் பேச்சு நயம் செறிந்து நிறைந்திருக்கிறது.

## ஐந்து மதிப்பெண் வினா - விடைகள்

**1. பேச்சாளரின் பண்புகள் குறித்து எழுதுக?**

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே உண்டாகும்" என்றார் அமரகவி பாரதி. உள்ளமும் நாவும் ஒன்றானால் உரையும் செயலும் ஒன்றாகும் என்று சுவாமி சுத்தானந்தர் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆகவே, பேசவேண்டும் என்ற ஆவல் உங்களுக்கு உண்டானால் உள்ளத்தில் உணர்ச்சி உந்தித் தள்ள வேண்டும். பல கூட்டங்களுக்குச் சென்று பிறர் பேசக் கேட்பவர்கள் மனத்தில், "நாமும் இதைப் பற்றி நன்றாகப் பேசலாமே" என்ற எண்ணம், எந்தப் பொருளைப் பற்றியாவது எழுதல் இயல்பு. இத்தகைய எண்ணம் இதயத்துள் ஊறி வளர்ந்த பின்னர்தான் மேடை மீது ஏறிப் பேச முன்வரவேண்டும். அதற்கு முன்னரே "பேசுவது என்ன பிரமாதம்?" என்று முன் வருதல், அசட்டுத் துணிச்சலாகும். "நன்றாகப் பேச முடியும்" என்ற நம்பிக்கை பிறந்த பின்னும், மேடை மீது ஏறிப் பேச அஞ்சுதல் அறியாமையில்தான் கொண்டுவிடும். "நாமாவது பேசவாவது" என்ற தாழ்வு மனப்பான்மையும் தவறு. முயற்சியினால் முடியாத காரியம் இவ்வுலகில் மிகச் சிலவே.

சொல்வார்களே தவிர, பேச்சாளன் பிறக்கிறான் என்று யாரும் சொல்வதில்லை.

கவிஞர்களுக்குக் கற்பனைத் திறன் வேண்டும், வருணிக்கும் திறமை வேண்டும்; வாசகர்களின் உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் கிளப்புந் திறன் வேண்டும்; கவிச்சுவை கனிந்து சொட்ட வேண்டும். ஆனால் பேச்சாளனுக்கு வேண்டிய முக்கியத் தேவை பழக்கந்தான். "சித்திரமும் கைப்பழக்கம்" என்பது உண்மையோ அன்றோ தெரியாது; ஆனால் "செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது மட்டும் வெள்ளிடை மலை.

R.B.ஷெரிடன் என்னும் ஆங்கில ஆசிரியன் முதலில் பேசியபோது, அவனது நன்மையில் ஆர்வம் கொண்ட நண்பர்கள் "அப்பா! இனியும் நீ பேச முயலாதே!" என்று அறிவுரை கூறினர். ஆனால் ஷெரிடன் "அந்த ஆற்றல் என்னுள் இருப்பது எனக்குத் தெரியும்" என்றாவது அது வெளிவந்தே தீரும். என்று தீரத்தோடு கூறினான். பிற்காலத்தில், பர்க், பாக்ஸ், பிட் முதலிய புகழோங்கிய பேச்சாளர்களையெல்லாம் தூக்கியடித்தது அவன் பேச்சின் பெருமை! அவனது உள்ளத்தில் கனன்ற ஒளி அப்படி சுடர்விட்டு பெருகியது. இதேபோல் இன்னும் பல சான்றுகள் வரலாற்றில் புதைந்து கிடக்கின்றன. ராசெஸ்டர் பிரபு என்பவர் பாராளுமன்றத்தில் முதல் முதலாக பேச எழுந்தார். "MY LORDS" என்று தொடங்கினார். ஆனால் உடனே தடுமாறிப் போய்விட்டார்.

"நான் - நான் - நான் இன்று மாலை எழுகிறேன் My Lords நான், நான், நான் என் பேச்சை நான்கு கிளைகளாக வகுக்கிறேன்" என்றார். பிறகு அப்படியே நெடுநேரம் நின்று விட்டார். அப்புறம் சோர்வு தோய்ந்த குரலில் "இம்மன்றத்தில் இனி நான் எழேன்; எழுந்தால் என்னை அப்படியே வெட்டிப் போட்டுவிடுங்கள்!" என்று கூறி உட்கார்ந்து விட்டார். இப்படி இன்னும் பற்பல சான்றுகள் கூறக்கூடும்; ஆனால் அவற்றின் அடிப்படையான கருத்து ஒன்றுதான். "பேசவேண்டும்" என்னும் ஆர்வம் உண்மையில் தோன்றிவிட்டால், எத்தகைய தடைகளும் உங்கள் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது; கட்டுப்படுத்தவும் கூடாது.

2. **பேச்சாளர் தனது அறிவை எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும்?**

இன்று கல்லூரி கல்வியோ பள்ளிக் கல்வியோ மட்டும் பெற்று ஒருவன் பேச்சுக் கலையில் முன்னேற முடியாது. பலத்திறப்பட்ட புத்தகங்களைப் பற்பல நூல் நிலையங்களினின்று பெற்றுக் கற்றுணர வேண்டும். நாள்தோறும் பத்திரிக்கைப் படித்து உலக நடவடிக்கைகளில் உண்மையை உணரவேண்டும். பொது மேடைகளிலும் (விவாத அரங்கங்களிலும்) பலரது உரைக்கேட்டு மகிழ வேண்டும்.

இவையெல்லாம் மேலெழுந்தவாரியாக...

ஒவ்வொன்றிலும் உங்கள் கிளர்ச்சியும் ஊக்கமும் தெளிவுபெற விளங்க வேண்டும். படிக்கும்போது அழகான கருத்துக்களோ, சரளமான நடையோ உங்கள் மனத்தைக் கவர்ந்தால், அதை உடனே ஒரு நோட்டில் குறித்து வைத்துக் கொள்ள உங்கள் உள்ளம் விழைய வேண்டும். நல்ல செய்யுளோ, பழமொழியோ ஒன்றைக் கண்டால் அதை உங்களுக்குள்ளேயே திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்க்க வேண்டும்.

அரசியல் விரிவுரைகள் செய்ய விரும்புவோரும், சொற்போரில் ஈடுபட விழைவோரும், கட்டாயம் பல புத்தகங்களைப் படித்தே தீர வேண்டும். இன்றைய தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் சொல்மாரி பொழியும் பலர் கருத்துகளின்றி அழகான சொல்லடுக்குகள் சேர்த்து கோட்டை கட்டுகிறார்கள். இந்த அட்டைக் கோட்டையை முதலில் காண்பவர்கள் "ஆ" என்று ஆச்சரியப்படுகின்றனர். ஆனால் அடுத்த நொடியே பொலபொலவென்று உதிர்ந்து விடுகிறது. "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரிந்துவிடும்" அல்லவா?

புத்தகப் படிப்புக்கு அடுத்தபடி சொந்தப் பழக்கங்களும், சொல்லாடல்களும் அறிவு வளர்ச்சிக்கு வழிகாட்டிகளாய் விளங்கக் கூடும். பேசும் கருத்துப்பற்றிப் பழக்கத்தில் தோய்ந்த ஆழ்ந்த உண்மை களை எடுத்துக் கூறினால், கேட்பவர்கள் பெரிதும் சுவைப்பார்கள். பழக்கங்களை மிக வன்மையோடு தங்கள் பேச்சுகளை எடுத்துக் கையாளக்கூடும். புத்தகப் படிப்பு மிகவும் இன்றியமையாதது. தலை சிறந்த பேச்சாளர் வின்ஸ்டன் சர்ச்சிலைப் பற்றி, திரு.ஆ.காசி விசுவநாதன் எழுதியுள்ள புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மேஜைக்குச் சமீபத்தில் ஒரு பீரோவில் பேராசிரியர்களான கிப்பன், மெக்காலே, அடிவன், லாக் முதலியோரின் பல புத்தகங்களும் அமெரிக்காவில் நடந்த புரட்சிக் கலகங்களைப் பற்றிய கட்டுரைகளும் இருந்தன. மற்றும் ஏராளமான புத்தகங்களும் அவருடைய பீரோக்களில் வைக்கப்பட்டிருந்தன. அவர் சேகரித்த புத்தகங்கள் ஏராளமானவை. அவரது புத்தகங்கள் பாதிக்குமேல் அவர் தந்தை வைத்துவிட்டு போனவை. எப்போதும் புத்தகமும் கையுமாகத்தான் சர்ச்சில் இருப்பார். சதா உருப்போட்டுத் தள்ளிக்கொண்டே இருப்பார். கிப்பன், மெக்காலே, டெனிஷன் முலியவர்கள் எழுதிய புத்தகங்களில் அவருக்கு மிக அதிகமான விருப்பம்."

3. **வரவேற்புரை - குறிப்பு வரைக?**

இதைக் கூட்டத்தின் தலைவருக்கு விட்டு விடுதல் வேண்டும். அவரைப் பற்றிய புகழுரைகளைச் சுருங்கக் கூறியபின் "அன்னாரைத் தலைமை தாங்கி இக்கூட்டத்தை இனிது நடத்தித் தருமாறு வேண்டுகிறோம்" என்று கூறுதல் நல்ல முறை. கழகத்தின் அருமை

பெருமைகளை விரித்துரைக்க, வரவேற்புரையைப் பயன்படுத்திக் கொள்ளலாம், இது கூட்டம் சேர்ப்பதற்கும் உதவும். குழுமியுள்ளவர்கள் பொறுமையுடன் கேட்கக் கூடிய தக்க தருணமாயும் அமையும்.

**4. நன்றியுரை - குறிப்பு வரைக?**

எக்காரணம் கொண்டும், நன்றியுரை 5 நிமிடங்களுக்கு மேல் பேசக்கூடாது' போகவும் முடியாது. தேர்வுள்ள பேச்சாளர்கள் விதிவிலக்கு, நன்றி கூறலின், பேச்சாளர்களுக்கும் தலைவருக்கும் நன்றி கூறுவதைவிடக் கழகத்தின் உறுப்பினருக்கும், குழுமியுள்ள கூட்டத்தினருக்கும் நன்றி கூறல் மிகவும் அவசியமானது. தேர்வுள்ள பேச்சாளரான திரு.சத்தியமூர்த்தி ஓரிடத்தில் நன்றி கூறிய முறை பலர் மனத்தில் ஆழப்பதிந்துள்ளது; அவர் நீண்ட நேரம் பேசுவார் என குழுமியிருந்த மக்கள் எதிர்ப்பார்த்தனர், ஆயின் ஒரே வாக்கியத்தில் அவர் நன்றியுரையை முடித்துவிட்டார். இன்று மாலை தலைமை வகித்தத் தலைவர் அவர்கட்கும் சிந்தனை மிக்க சொற்பொழிவாற்றிய ஐயனே! உங்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி.

**5. பேச்சாளர் மேடையில் கடைப்பிடிக்க வேண்டியவை யாவை?**

இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று தடை உத்தரவு களாகவே ஒரு படலம் அடுக்கிவிட்டோம். இதைக் கண்டு சிலர் சீறி எழக் கூடும். "இவை ஒன்றும் நாங்கள் செய்யவில்லை; ஆனால், என்னதான் செய்ய?" என்று அவர்கள் ஆத்திரப்படக்கூடும் "ஆத்திரப்படாதீர்கள்!" என்று இன்னொரு தடை உத்தரவையும் போட்டுவிட்டு, பேச்சாளர்கள் செய்ய வேண்டிய செயல்களை இங்குக் கவனிப்போம். "செய்யாதே" என்ற பகுதியில் வந்த சில கருத்துக்களே இங்கு உருமாறிக் காணப்படலாம். "கூறியது கூறல்" எனும் குற்றத்திற்கு நாங்கள் உட்பட்டபோதிலும் பரவாயில்லை; பொருள் உங்கள் உள்ளத்தில் நன்கு பதிந்தால் அதுவே போதும்.

1. கூட்ட முழுதும் கேட்கும்படி பேசுங்கள். வலப்புறமோ இடப்புறமோ பேசிக்கொண்டே திரும்ப நேர்ந்தால், உங்கள் குரலை உயர்த்துங்கள். அப்பொழுதுதான் அனைவருக்கும் உங்கள் பேச்சுக் கேட்கும்.

2. உங்கள் குரல் மாறுபடுவதுபோல், உங்கள் நடையின் வேகமும் மாறட்டும்.

3. பொறுமையை இழக்காது, நிலைகலங்காமல் நில்லுங்கள். கூட்டத்தில் உங்களுக்கு புதிர்ப்பு மிகுதியாக இருக்கலாம். அத்தகைய கூட்டங்களில் தளராமல், ஆத்திரத்திற்கு இடம் தராமல், அயராமல் பேசிப் பெயரெடுப்பதுதான் பேச்சாளரின் உயர்வு. "இன்று நான்கு பேரே நம் பக்கம் இருக்கிறார்கள்" என்று அஞ்ச வேண்டிய கட்டாயமே இல்லை. உங்கள் கட்சியில் உண்மை இருந்தால் காலப்போக்கில் இந்த நாலும் நாற்பதாய், நாற்பது நானூறாய் - இப்படியே உங்கள் வெற்றி ஓங்கும்.



4. கூட்டத்தினரது கைதட்டல் கண்டு மகிழ வேண்டும் என்ற நோக்கமில்லாமல், உங்கள் கடமையைச் செய்யும் ஒரே நோக்கத்துடன் பேசுங்கள். உங்கள் மனத்திற் பட்டத்தை எடுத்துரைத்தல் கடமை. அதை அவையோர் பாராட்டினால் நல்லது; இல்லையென்றால் அதைப்பற்றி வருந்தி பயனில்லை. கூட்டத்தினர் பாராட்டவேண்டுமென்று அவர்கள் இயல்புக்கு நாம் இறங்கிப் பேசுதல், அன்றைக்கு மகிழ்ச்சி அளிக்கலாம். ஆனால் நாளடைவில் இப்பழக்கம் உங்களுக்கு நிலையான கருத்து ஒன்றுமில்லாதபடி செய்துவிடும். நிலைத்த கருத்து இல்லாதவனது மதிப்பும் நிலையற்றதுதான் போகும்.

5. தெளிவாய் பேசுங்கள், தெளிவுதான் பேச்சாளர்களுக்கு மதிப்பளிக்கும் பங்கு (அ) பண்பு

6. உண்மையைப் பேசுங்கள். உண்மைதான் கேட்போர் உள்ளக் கதவைத் திறந்துவிடும் பொன்னான திறவுகோல்.

7. இயற்கையாகப் பேசுங்கள். இயற்கை வழிதான் உங்களை சரியான பாதையில் திருப்பும். செய்கை நடை உங்களுக்கும் கேட்போருக்குமிடையில் பெருத்த சுவர் எழுப்பிவிடும்.

8. எளிய சொற்களால் பேசுங்கள், அப்போதுதான் அனைவருக்கும் புரியும். பேராசிரியர் ஆ.முத்துசிவன் இடித்துக் கூறுவதுபோல், "முத்தமிழ்ப் புலமையும் வித்தகப் பெருமையும் வாய்க்கப்பெற்று, இவன் வீற்றிரா நின்ற அவைத் தலைவர் அவர்கட்கும், ஈண்டுப்போந்துள்ள ஏனைய பெரியார்கட்கும், எளியோனுடைய உள்ளன்பார்ந்த வணக்கம் உரித்தாகுக..." என்றெல்லாம் அவையடக்கம் பெருக்கிச் சொற்களை அடுக்கி மக்களை மயக்கும் காலம் மலையேறி விட்டது.

9. கணக்குப் பிசகாமல், கூறும் பொருளை சரியாக எடுத்துக் கூறுங்கள். வேண்டுமென்று, பொருளை மிகைப்படுத்தி உயர்வு நவிர்ச்சியாகச் சொல்வது கூடாது! விஷயத்தைக் கூட்டியும், குறைத்தும் கூறுதல் பொய் சொல்வதற்கு ஒப்பாகும்.

10. உங்களுக்கு உறுதியாகத் தெரிந்த கருத்தைத் துணிவாக அறுதியிட்டுக் கூறுங்கள். திட்டமாகத் தெரியாத பொருளைப் பற்றிப் பேச நேர்ந்தால், கோழைகளாய் தோற்றாலும் பரவாயில்லை. அவற்றைப் பற்றித் திடமாய் பேச ஆரம்பித்தல் தவறு. தவறு மட்டுமல்ல; உங்களை அது தத்தலித்து விட்டுவிடும்! ஆகவே விழிப்பாயிருங்கள்!

11. கடைசியாய், நண்பர் முத்துசிவனார் கூறுவதையே மீண்டும் எடுத்துரைக்க விரும்புகிறோம். ஆழம் பொதிந்த இக்கருத்துரைகள் பற்றி நன்கு சிந்தியுங்கள்.

சொல்லுகின்ற கருத்தைச் சுவையுடன் சொல்லவேண்டும்; திறம்படச் சொல்லவேண்டும்; தெளிவாகவும் சொல்லவேண்டும். ஏன் என்பதை

விரித்துக் காட்ட வேண்டும். உணர்ச்சி ஒளி மின்னவேண்டும். ஊக்கம் துடிக்க வேண்டும். இம்முறையில் நிகழும் விரிவுரையே இக்காலத்திற்கு ஏற்கும். இதுவே காலப்போக்கு!"

6. **பேச்சாளர் மேடையில் தவிர்க்க வேண்டியவை யாவை?**

பேச்சாளர்களுக்கென்று இப்படிப் பேசு, அப்படி பேசு என்றெல்லாம் சொல்லிக் கொடுப்பது மிகவும் கடினம். அந்தக் கடினமான வேலையை இதுவரை ஓரளவு செய்ய முயன்றுள்ளோம். அதில் எவ்வளவு தூரம் வெற்றி அடைந்தோமென்பதை நீங்கள்தான் ஆராய வேண்டும். பேசும் ஆற்றலும் ஆவலும் உங்களுக்கு இருந்தால் அதுவே வெற்றிக்கு அறிகுறிதான். இப்புத்தகம் பற்றிய கவலையே வேண்டியதில்லை. ஆனால் பேச்சாளர்களை இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்றெல்லாம் உத்தரவு போட்டுள்ளனர். அவற்றையும் தெரிந்து வைத்துக்கொள்ளுதல் நல்லது என்ற அளவில் மட்டும் பல ஆங்கில அறிஞர்கள் கூறியிருப்பதை இங்குத் திரட்டித் தருகிறோம். இந்தத் தடைகளை விதித்து உங்களைக் கட்டுப்படுத்த எங்களுக்கு விருப்பமில்லை. படியுங்கள்; பயன்தருமென்று கருதினால் பின்பற்றுங்கள். இன்றேல் - இன்றே அவற்றை மறத்தலும் நன்றே!

1. உங்கள் புத்திசாலித்தனத்தைக் காட்ட முயற்சிக்காதீர்கள். அதில் உங்களுக்கு கிளர்ச்சி தோன்றலாம். ஆனால் கேட்போர் மனத்தில் அது வேறு வகையாகப் படலாம்.
2. நகைச்சுவை ததும்ப பேச முயற்சிக்காதர்கள். இயல்பாக உங்களிடம் நகைச்சுவை அமைந்திருந்தால், அதைத் தடுக்க யாராலும் முடியாது. ஆனால் வேண்டுமென்றே நகைச்சுவையை தேடிப்பிடித்தாலும் அது உங்களைவிட்டு நழுவி விடும்; வேடிக்கைக் கதைகளைத் தேடிப்பிடித்தலைதல் விந்தையினும் விந்தை.
3. எடுத்தக் கருத்திற்கு புறம்பாகப் பேசாதீர்கள்; இது இன்றைய புகழோங்கியப் பேச்சாளர் பலர்க்கூட கட்டாயம் கவனிக்க வேண்டிய கட்டாயம்.
4. கடுமையாகவோ கசப்பாகவோ பேசாதீர்கள். பேச்சில் நையாண்டி உதவாது.
5. கருத்தை அதிகமாகக் கொட்டி ஆர்ப்பாட்டம் செய்யாதீர்கள்.
6. புள்ளி விவரங்களை அள்ளி வீசிக் கூட்டத்தினர் மனத்தைக் குழப்பாதீர்கள்.
7. அடுக்கடுக்காக மிடுக்குக் கேள்விகள் போட்டு எதிரிகளைத் திகைக்க வைக்கலாம் என்று எண்ணாதீர்கள்.
9. குரலும் செய்கையும் ஒன்றாக வேண்டும். அளவுக்கு மிஞ்சிய உணர்ச்சியால் குரலை கட்டுக்கு மீறவிட்டு விடாதீர்கள்.
10. கூட்டம் பெரியதானாலும், குரலை கட்டுக்கு மீறவிட்டு குழப்பம் செய்யாதீர்கள்; கூட்டம் கண்டு கலங்கிப் பெருமூச்சு விடவும் வேண்டாம். மூச்சை சரிபடுத்திக் குரலின் அளவை ஒழுங்கு செய்தால் பேச்சு சரியாகிவிடும்.
11. பீடிகையை நீட்டி விடாதீர்கள். பேச்சின் நோக்கத்தைக் கூறி உடனே பொருளில் புகுந்து விடுங்கள்.
12. பொருளின் முக்கிய கருத்தை மறந்து விடாதீர்கள். அதுதான் அடிமரம் என்றால், உங்கள் எடுத்துக்காட்டுகளும் பிற கருத்துக்களும் கிளைகளாக நின்று அந்த அடிமரத்திற்கு உறுதி அளிக்கட்டும். ஆனால் கிளைகளை மிகுதியாக்கி, அடிமரத்தையே ஆட்டம் கொடுக்கும் நிலையில் வைத்து விடாதீர்கள்.
13. மந்திர முணுமுணுப்பைப் போல் ஒரே நிலையான குரலில் கடைசி மட்டும் பேசித் தீர்க்காதீர்கள்.
14. பல வேடிக்கைக் கதைகள் பேசித் தீர்க்காதீர்கள்.
15. சொல்லின் செல்வர் ஆகிவிட வேண்டும் என்று ஆத்திரப் படாதீர்கள். கருத்தை நன்குணர்ந்து அதை எடுத்துரைத்தல், அதுவே உங்களை நாநலமுடையவராக்கி விடும்.
16. உங்களை எதிர்ப்பவர்களைப் பற்றி அவதூறுகள் கூறாதீர்கள். தேர்தல் விரிவுரைகளில் இந்த அறிவுரை மிகவும் முதன்மையானது.
17. இழிவுப் பேச்சை அறவே ஒழியுங்கள்.
18. கூட்டம் முழுமைக்கும் கேட்கும்படி பேசுங்கள். இடையில் வலமாகவும் இடமாகவும் திரும்பினால், அனைவரும் கேட்கும்படி குரலைச் சற்று மிகுதிப்படுத்துங்கள்.
19. நீங்கள் பேசும் பொருள் பற்றி உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டத் தயங்காதீர்கள்! அரசியல் பேச்சானால் கட்டாயம் கனல்கக்கப் பேசுங்கள். உங்கள் பேச்சில் நெருப்புப் பொறி பறக்கா விட்டால், அதை நெருப்பிலிட வேண்டியதுதான்.
20. உங்கள் வாழ்க்கை வரலாறுகளையும், கற்பனை கதைகளையும் இடையில் புகுத்தி, அவையினருக்குத் தொந்தரவு கொடுக்காதிருங்கள்.

**பேச்சாளருக்கு வேண்டிய தன்னம்பிக்கை**

ஒரு பேச்சாளனின் சொற்பொழிவானது சோர்ந்து கிடக்கும் மனத்திற்கு எழுச்சி ஊட்டுவதாக, திசை தெரியாமல் தடுமாறும் உள்ளங்களுக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும். அந்த வகையான பேச்சு வலிமையும் வரவேற்பும் பெற்று விளங்கும்.

1. நன்கு தயாரிக்கப்பட்ட குறிப்புகள்
2. மேடைக்கு ஏற்ற எடுப்பான உடை.
3. பொதுச்சேவைகளைக் குறித்த எடுத்துக்காட்டுகள்
4. குறித்த நேரத்திற்குள் பேச்சை முடிக்கும் விதம்

என்பது போன்ற நெறிமுறைகளை மேடையில் கவனமாகப் பின்பற்றும் பேச்சாளர் தன்னம்பிக்கையில் தனது பேச்சைத் தொடங்கி சிறப்பாக நிறைவு செய்வார்.

தேனீக்கள் அழகான தேன்கூட்டைக் கட்டுகின்றன.

சிலந்தி தானே அழகான வலை பின்னுகிறது

எளிய கரையான் பெரிய புற்றினை உருவாக்குகின்றன

ஆக மனிதனைவிட குறைவான அறிவும் ஆற்றலும் கொண்டவைகள் அரிய செயல்களைச் செய்யும்போது ஆறு அறிவும் எதனையும் மாற்றி அமைக்கும் ஆற்றலும் கொண்ட மனிதனால் முடியாதது எதுவும் இல்லை என்ற தன்னம்பிக்கை ஒவ்வொரு பேச்சாளனுக்கும் வேண்டும்.

பேச்சின்போது வாழ்வில் வெற்றி பெற்ற உயர்ந்த மனிதர்களின் வரலாறுகளை எடுத்துரைப்பதன் மூலம் உற்சாகத்தை உருவாக்க முடியும். உடல்குறைபாடுகள் இருப்பதால் முன்னேற்றம் அடைய முடியவில்லை எனச் சிலர் நினைப்பதுண்டு. வறுமையும் ஏழ்மையும் மிக்க குடும்பத்தில் பிறந்ததால்தான் நமக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை எனச் சிலர் ஏங்குவதுண்டு. ஆனால் உலகில் இதுபோன்ற சமூக சூழல்களில் இருந்தே பெரிய சான்றோர்களும், அதிபர்களும், விஞ்ஞானிகளும் உருவாகி நாட்டிற்கு - மக்களுக்கு உழைத்தார்கள் என்பதை அறியும் போது தன்னம்பிக்கை உள்ளத்தில் ஊற்றாக பொங்கி பெருகுகின்றது.

**7. பட்டிமன்றம் என்றால் என்ன?**

கல்வியிலோ, அறிவிலோ அல்லது இரண்டிலுமோ தேர்ந்தவர்கள் தங்கள் கருத்தே சிறந்தது என்று நிலைநிறுத்தப் போதுமான சான்றுகள் கொடுத்து வாதிடுவது பட்டிமன்றம். தங்கள் இருவரினும் மேலான அறிவும், தெளிவும் பெற்ற ஒருவரை நடுவராக வைத்து அவர் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டும்.

**8. பட்டிமன்றத்தின் பயன் என்ன?**



பட்டிமன்றம் நம்மை ஆயத்தம் செய்கிறது. ஆதாயங்களைத் தேடும் அறிவைத் தருகிறது. பேசும் திறமையை வளர்க்கிறது. சரியான விடையைத் தரத் தயார் செய்கிறது. மேடை நடுக்கத்தைத் தவிர்க்கிறது. மிகப்பெரிய கருத்துக்களையும் சுருக்கிச் சொல்லும் தன்மையை வளர்க்கிறது. மக்களிடம் சுருக்கிச் சொல்லும் தன்மைய வளர்க்கிறது. படிப்படியாக தரத்தை உயர்த்துகிறது. உண்மை அறிவை வளர்க்கிறது. பேரறிஞர்கள் தொடர்பை 6,ற்படுத்துகிறது. தவறுகளைத் திருத்திக் கொள்ள வழிவகுக்கிறது. நிறையப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது. புகழைத் தருகிறது. மக்களிடத்தில் மதிப்பை ஏற்படுத்துகிறது. எப்போதும் விழிப்பாக இருக்கச் செய்கிறது.

**9. நடுவர் யார்?**

பட்டிமன்ற நடுவர் பொறுப்பேற்று நடத்துபவர் தேர்ந்தவராக இருக்க வேண்டும். மேடைக்கு வருமுன்னர் தாம் இரண்டு அணிகளிலும் பேசினால் எப்படியெல்லாம் பேசுவோம்? என்பதைச் சிந்தித்து இரண்டு அணிகளிலும் பேசக்கூடிய கருத்துகளைக் கூடியமட்டில் சிந்தித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும். முடிவு என்னவாக இருக்க முடியும்? என்பதையும் கவனித்து வைத்திருப்பது நல்லது.

**10. பட்டிமன்றங்கள் மக்களைக் கவருவதேன்?**

- பலதரப்பட்ட பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர்.
- நவரசக் கருத்துகளும் இடம் பெற வாய்ப்பு இருக்கிறது.
- தலைப்புகள் கவர்ச்சியாக அமைகின்றன.
- குறைந்த நேரத்தில் நிறைந்த கருத்துகள் கிடைக்கின்றன.
- சாதாரண பேச்சைவிட வாதம் செய்வது கவனத்தைக் கவருகிறது.

**11. அணித்தலைவர்கள் யார்?**

நீதிமன்றத்தில் வாதாடும் வழக்கறிஞர்கள் போல அவை நாகரிகத்தோடு, - பெருமதிப்பிற்குரிய நடுவர் அவர்களே! என்று தொடங்கி நேரடியாக வாதத்திற்குச் செல்லவேண்டும் பட்டிமன்றம் நடைபெறும் சூழலைப் புரிந்துகொள்ள வேண்டும். பட்டிமன்றம் சான்றோர் அவை, மாணவர் அரங்கம், பொதுவிடங்கள், தொழிற்சாலைகள், பலதரப்பு மக்களும் கலந்த இடங்கள் ஆகியவற்றைப் பொறுத்து வாதம் அமைய வேண்டும். வாதம் - நடுவர் முன்பே வைக்கப்பட்டாலும், பேச்சு - மக்களை நோக்கி இருக்கவேண்டும்.

எதிர்அணியைச் சேர்ந்தவர்களை கீழ்த்தரமாக விமர்சிக்கக்கூடாது நடப்பது வாதமே! தெருச்சண்டையல்ல என்பதை உணரவேண்டும்.

உணர்ச்சி வசப்பட்டதுபோல நடிக்கவேண்டுமே தவிர, மோதலுக்கு வகை செய்யக்கூடாது.

12. **பட்டிமன்றம் நடத்தும் இடங்களைக் கூறுக.**

- பள்ளி, கல்லூரி, தொழிற்கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள்
- ஆலயங்கள், மடங்கள், திருவிழா நடைபெறம் இடங்கள்
- திருமண வீடுகள்
- பொதுவிடங்கள்
- பிறந்தநாள், திருமணநாள், மணிவிழாக்கள், திருமண வெள்ளிவிழா, பொன்விழா கொண்டாடுமிடங்கள்
- புதுமனைப் புகுவிழா, வெளிநாடு சென்று திரும்பியர்களைப் பாராட்டும் இடங்கள்.
- அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள்
- மருத்துவமனைகள், சிறைச்சாலை, காவல்நிலையங்கள்
- நீத்தார் நினைவு இடங்கள், நினைவுநாள் நிகழ்ச்சி
- அரசியல் தலைவர்களின் வெற்றி விழாக்கள்
- அறிவியல் கூடங்கள், வானொலி, தொலைக்காட்சி இடங்கள்
- கூட்டுறவு வங்கிகளின் விழாக்கள், கடன் கொடுக்கும் விழாக்கள்.
- தனியார் நிறுவனங்கள், நட்சத்திர ஓட்டல்கள்
- மனிதநேய மையங்கள், தொண்டு நிறுவனங்கள்
- திரை அரங்குகள், இசை அரங்குகள்
- நல்ல நோக்கத்திற்காக நிதி திரட்டக்கூடிய இடங்கள்
- இரயில், கப்பல், விமான நிலையங்கள்
- அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் போன்ற சேவை அமைப்புகள்
- பகுத்தறிவுப் பிரச்சார நிறுவனங்கள்.
- பல்வேறு இயக்கத்தினர் நடத்தும் மாநாடுகள்

13. **பல்வேறு இடங்களில் நடைபெற்ற பட்டிமன்றத் தலைப்புகள் யாவை?**

**கல்வி**

- மாணவப் பருவத்தில் பெரிதும் தேவை *கல்வியே! ஒழுக்கமே!*
- மாணவரை மேம்படுத்துவது *அறிவே! ஆற்றலே!*
- மாணவரின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் காரணம் *ஆசிரிய... தன் முயற்சியே!*
- மாணவர்கள் பின்னடைவதற்குப் பெரிதும் காரணம் *வீட்... சூழலே! பள்ளிச்சூழலே!*
- கல்வி கற்கப் பெரிதும் தேவை *முயற்சியா? பொருளா?*
- பள்ளியில் பெரிதும் பயன்அடைவது, *மாணவ... மாணவியரே!*

14. **பட்டிமன்றங்கள் தோற்றம் குறித்து விளக்குக.**

தமிழகத்தில் பட்டிமன்றங்கள் எத்தனை காலமாக இருந்திருக்... வேண்டும் என்று ஆராய்ந்து பார்த்தால் பல நூற்றாண்டுகளாக இச்சொ... பயன்படுத்தப்பட்டு வருகிறதென்பதை அறிகிறோம்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையில்

*"ஒட்டிய சமயத்தின் உறுபொருள் வாதிகள்*
*பட்டி மண்டபத்து பாங்குறித்து ஏறுமின்"*

- எனக் கூறுகிறது.

9ஆம் நூற்றாண்டில் வந்த மணிவாசகர்,

*"எட்டும் இரண்டும் அறியா தென்னை*
*பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை"*

- எனப் பாடுகிறார்.

12ஆம் நூற்றாண்டில் வந்த கம்பரும்

*"பன்னரும் கலைதெரி பட்டிமண்டபம்"*

- எனக் குறிப்பிடுகின்றார்.

ஆயினும் இவையெல்லாம் பொது இடத்தில் நிகழ்ந்த சொற்போ... நிகழ்ச்சியைக் குறிக்கின்றன. பிற்காலத்தில் இதுவே "பட்டிமன்றம்" என... மாறியிருக்கவேண்டும்.

பட்டிமன்றத்தில், ஓர் அணிக்கு மூவராக அல்லது இருவராக இரண்டு அணியினர் பேச, நடுவராக உள்ள நல்லறிஞர் அவர்களின் வாதத்திற்கேற்ப தீர்ப்பு வழங்குவார்.

இப்பட்டிமன்றங்களை வளர்த்தெடுத்து பொதுமக்களுக்குக் கொண்டு சென்ற பெருமை, காரைக்குடி கம்பன் கழகம் போன்ற அமைப்புகளுக்கும், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விஸ்வநாதம், அ.ச.ஞானசம்பந்தன், திருக்குறள், முனுசாமி, திருச்சி இராதாகிருஷ்ணன், பா.நமச்சிவாயம், சாலமன் பாப்பையா போன்ற பெரும் மக்களையே சாரும்.

இப்பட்டிமன்றத் தலைப்புகளும் ஒரு காலத்தில் புராண இலக்கியம் சார்ந்தே நடத்தப்பெற்றன. தற்போது சமுதாயம் சார்ந்த தலைப்புகளாக,

குடும்ப அமைப்புகள் சார்ந்த விவாத மேடைகளாக திரையிசைப் பாடல்களை மட்டும் வைத்து வாதிடும் மன்றங்களாக மாறிவிட்டன.

இன்றைய தமிழகத்தின் மேடைப் பேச்சாளர்கள் பலர் பட்டிமன்ற அமைப்புகளிலேயே காணப்படுகின்றனர்.

15. **வழக்காடு மன்றங்கள் - வரையறு.**

இம்மன்றங்களில் மூவர் மட்டுமே பங்கேற்பர்

*வழக்குத் தொடுப்பவர் ஒருவர்;*
*எதிர்வழக்காடுபவர் மற்றவர்;*
*நடுவராக ஒருவர்.*

பட்டிமன்றத்திற்கும் வழக்காடு மன்றத்திற்குமான வேறுபாடு பட்டிமன்றத்தில் ஒருவர் பேசி அமர்ந்த பிறகு எதிரணியினர் எழுந்து மறுப்புரை சொல்லுவர். ஆனால் வழக்காடு மன்றங்களில் வழக்கு வைப்பவரை எதிர்வழக்காடுபவர் உடனடியாக மறுக்கலாம்.

இவ்வழக்காடு மன்றங்களின் தலைப்புகளும் தொடக்க காலங்களில் புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் சார்ந்தவையாக மட்டுமே இருந்தன. எடுத்துக்காட்டாக,

*"கர்ணன் குற்றவாளி"*

*"வாலியை மறைந்திருந்து கொன்ற இராமன் செயல் அறமன்று"*

*"கோவலன் குற்றவாளி"*

*"மதுரையை எரித்த கண்ணகி குற்றவாளி"*

இவையே பிற்காலத்தில்

*"இந்த மனிதன் குற்றவாளி*
*இச்சமுதாயம் குற்றமுடையது"*

என்று மாறியுள்ளது. பேச்சாளர்கள் தர்க்க முறையில் பேசுவதற்கான பயிற்சி இவ்வகை அரங்கங்களில் கிடைக்கும்.

16. **சிந்தனைப் பேச்சின் தன்மைகள் யாவை?**

பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, கவியரசு கண்ணதாசன், கவிப்பேரரசு, சட்டப் பேரவைத் தலைவர் காளிமுத்து போன்ற பலருடைய பேச்சில் சிந்தனையைத் தூண்டும் அரிய கருத்துக்கள் பூமழையாய்க் கேட்போரை மகிழ்விக்கும்.

தளர்ந்து கிடக்கின்ற உள்ளங்களைச் சக்திமிக்க பேச்சாளனின் பேச்சு நிமிர்ந்து நிற்கச் செய்யும்.

சுதந்திரப் போராட்டக் காலத்திலே கப்பலோட்டிய தமிழராகிய வ.உ.சிதம்பரனாரின் பேச்சும், சுப்பிரமணிய சிவாவின் வீர உரையும்



மகாகவி பாரதியின் எழுச்சிநடையும் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த தீரர் சத்தியமூர்த்தியின் வீர உரைகளும் அடிமைப்பட்டுக் கிடந்தோருக்கு சுதந்திரச் சிந்தனையைத் தூண்டி விடும் பேச்சாக அமைந்திருந்தன.

17. **மேடையில் இனிமையான பேச்சு எவ்வாறு அமையவேண்டும்?**

இனிமையான பேச்சு எதிரொளியையும் தன்பால் ஈர்க்கும் காஞ்சிபுரத்திலே ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்துப் போட்டியிடுகின்ற வேட்பாளர் மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர். மிகுந்த செல்வந்தரும் கூட; இந்நிலையில் பேரறிஞர் அண்ணாவிற்கு வாக்குச் சேகரிக்க, ஆதரித்துப் பேச புகழ்பெற்ற நகைச்சுவை நடிகராகிய கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனை அழைத்திருந்தனர்.

அவர் பேசப் போகிறதை அறிந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அம்மை தானத்திலே கூடியிருந்தனர். கலைவாணர் அவர்கள் தன் பேச்சைத் தொடங்கினார்.

"பெரியோர்களே..... தாய்மார்களே.... வாக்காளப் பெருமக்களே... நீங்கள் அனைவரும் தேர்தலில் கட்டாயம் ஓட்டுப்போடவேண்டும்" என்று தொடங்கியவர் பேரறிஞர் அண்ணாவிற்கு ஓட்டுப் போடுங்கள் என்றோ அவருக்காக ஓட்டுக் கேட்க வந்திருக்கிறேன் என்றோ பேசாமல் அவரை எதிர்த்து நின்ற டாக்டரைப் புகழ்ந்து பேசிக்கொண்டே இருந்தார்.

"இதோ பாருங்கள், நம் அண்ணாவை எதிர்த்து நிற்கின்ற மருத்துவர் ஒரு மேதை,

எத்தனையோ அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து இவ்வூர் மக்களைக் காப்பாற்றியவர்.

அவருடைய மருத்துவ அறிவு பலருக்கு உடல்நலத்தைத் தந்திருக்கிறது. இத்தகைய புகழ்பெற்ற மருத்துவர் இல்லாவிட்டால் இவ்வூர் மக்களின் கதி என்னாகும்? அவருடைய மருத்துவ சேவை இந்த ஊருக்குத் தேவை. எனவே டாக்டரை மருத்துவமனைக்கு அனுப்புங்கள்" என்றபோது திரண்டிருந்த அத்தனை பேரும் மகிழ்ச்சியால் கைதட்டினர்.

எவ்வளவு அழகான பேச்சு நயம். பாருங்கள்.

*"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்"*

கேட்டுக் கொண்டிருக்கின்றவர்களைத் தன் பேச்சாற்றலால் கட்டிப் போட்டு பகைவரும் கேட்க விரும்பும் பேச்சே சிறந்த பேச்சு என்னும் வள்ளுவர் கருத்துக்கு எடுத்துக்காட்டாக மேற்குறித்த நிகழ்வை நினைத்துப் பார்க்கலாம்.

18. **மதம் சார்ந்த பட்டிமன்றத் தலைப்புகள் யாவை?**

- ❖ பக்திநெறி பரவப் பெரிதும் காரணம் பெற்றோரா? சமுதாயமா?
- ❖ இறைநெறி பரவக்காரணம் ஆலயங்களா? இல்லங்களா?
- ❖ இயேசுநாதர் பெரிதும் செய்தது சமூக சேவையா? இறைச்சேவையா?
- ❖ பக்திநெறி பெருகப் பெரிதும் காரணம் ஆண்களா? பெண்களா?
- ❖ ஆலய மேம்பாட்டுக்குப் பெரிதும் துணை நிற்பது ஆண்களா? பெண்களா?

19. **சமூகம் சார்ந்த பட்டிமன்றத் தலைப்புகள் யாவை?**

- ❖ தனிமனித ஒழுக்கத்திற்குப் பெரிதும் பொறுப்பு *குடும்பமா? சமுதாயமா?*
- ❖ தற்கால வாழ்வுக்குப் பெரிதும் உகந்தது *கூட்டுக்குடும்பமா? தனிக்குடும்பமா?*
- ❖ குடும்ப முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணைபுரிவது *மனைவியா? கணவனா?*
- ❖ குடும்பங்களில் ஒற்றுமை நிலவப் பெரிதும் காரணம் *இளைஞர்களே! முதியவர்களே!*
- ❖ குடும்பச் சிக்கனத்திற்குப் பெரிதும் பொறுப்பு *ஆணா? பெண்ணா?*
- ❖ குடும்ப ஒழுக்கத்திற்குப் பெரிதும் பொறுப்பு *தாயா? தந்தையா?*

## பத்து மதிப்பெண் வினா - விடைகள்

1. **பட்டிமன்றம் பற்றி ஒரு கட்டுரை வரைக? (அல்லது) பட்டிமன்றம் என்பது என்ன?**

கல்வியிலோ, அறிவிலோ அல்லது இரண்டிலுமோ தேர்ந்தவர்கள் தங்கள் கருத்தே சிறந்தது என்று நிலைநிறுத்தப் போதுமான சான்றுகள் கொடுத்து வாதிடுவது பட்டிமன்றம். தங்கள் இருவரினும் மேலான அறிவும், தெளிவும் பெற்ற ஒருவரை நடுவராக வைத்து அவர் தீர்ப்புக்குக் கட்டுப்படவேண்டும்.

இம்முறை ஆதிகாலந்தொட்டே தொடங்கி படிப்படியாக இன்று நாம் காணும் பட்டிமன்றமாக மலர்ந்திருக்கிறது. நக்கீரர் - சிவபெருமான் இருவரிடையே தோன்றியவாதம் - பிரதிவாதம், சாக்ரடீஸ் - ஆட்சியாளர்கள், சாத்தான் - ஏவாள், ஔவை - ஆறுமுகன், கண்ணகி - பாண்டியன் நெடுஞ்செழியன், கட்டபொம்மன் - ஆங்கிலேயர் (ஜாக்சன் துரை) போன்றவர்கள் பட்டிமன்ற வளர்ச்சிக்குப் பொருளாக விளங்கினர்.

**பட்டிமன்றம் ஏன்?**

எந்த ஒரு பொருளையும் நாம் முழுமையாக அறிந்து கொள்ள கேள்வி பிறக்கவேண்டும். கேள்வி பிறக்கிறதென்றாலே அந்த குறிப்பிட்ட பொருளைப்பற்றி ஏதேனும் அறிந்திருக்கிறோம் என்பது பொருள். கேள்வி பிறந்தவுடன் பதில் கிடைக்க முயற்சிக்கிறோம். பதில் போதுமானதாக இல்லையெனில் மீண்டும் முதலில் கேட்ட கேள்வியில் தொடர்பாக துணைக்கேள்விகளை எழுப்பி கருத்து தெளிவாகும் வரை கேட்கிறோம்.

**பட்டிமன்றத்தின் பயன்**

பட்டிமன்றம் நம்மை ஆயத்தம் செய்கிறது. ஆதாயங்களைத் தேடும் அறிவைத் தருகிறது. பேசும் திறமையை வளர்க்கிறது. சரியான விடையைத் தரத் தயார் செய்கிறது. மேடை நடுக்கத்தைத் தவிர்க்கிறது. மிகப்பெரிய கருத்துகளையும் சுருக்கிச் சொல்லும் தன்மையை வளர்க்கிறது. நகைச்சுவைத்திறத்தை வளர்க்கிறது. படிப்படியாக தரத்தை உயர்த்துகிறது. உண்மை அறிவை வளர்க்கிறது. பேரறிஞர்கள் தொடர்பை ஏற்படுத்துகிறது. தவறுகளைத் திருத்திக் கொள்ள வழி வகுக்கிறது. நிறையப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது. புகழைத் தருகிறது.

**பட்டிமன்றங்கள் மக்களைக் கவருவது ஏன்?**

- பல திறப்பட்ட பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர்.
- தலைப்புகள் கவர்ச்சியாக இருக்கின்றன
- தாங்கள் விரும்பும் கருத்தைப் பல பேச்சாளர்களுள் ஒருவராவது கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கை.
- சிறந்த பொழுதுபோக்காக அமைகிறது.
- இதுவரை தெளிவடையாத கருத்து தெளிவடைய வாய்ப்பு உண்டு.

**செலவினங்களுக்கான காரணங்கள்**

- பட்டிமன்றம் நடைபெறும் இடம்
- போக்குவரத்து
- பொன்னாடைகள்
- பேச்சாளர்களுக்கு உணவு ஏற்பாடு
- அழைப்பிதழ், சுவரொட்டி அச்சடிக்க, ஒலிபெருக்கி அமைக்க

**நடுவர்**

பட்டிமன்ற நடுவர் பொறுப்பேற்று நடத்துபவர் தேர்ந்தவராக இருக்க வேண்டும். மேடைக்கு வருமுன்னர் தாம் இரண்டு அணிகளிலும்

பேசினால் எப்படியெல்லாம் பேசுவார்? என்பதை சிந்தித்து இரண்டு அணிகளிலும் பேசக்கூடிய கருத்துக்களைக் கூடியமட்டில் சிந்தித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும். முடிவு என்னவாக இருக்க முடியும்? என்பதை கவனித்து வைத்திருப்பது நல்லது.

**பட்டிமன்ற வெற்றி**

நடுவர், அணித்தலைவர், பேச்சாளர், நோக்கர், மணி அடிப்பவர் ஆகியோரின் கூட்டு முயற்சியே பட்டிமன்றத்தின் வெற்றியாகும். இதைப் பார்வையாளர்களின் கையொலி காட்டிவிடும்.

**பட்டிமன்றங்கள் நடத்தும் இடம்**

- பள்ளி, கல்லூரி, தொழிற்கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள்
- ஆலயங்கள், மடங்கள், திருவிழா நடைபெறும் இடங்கள்
- திருமண வீடுகள்
- பொதுவிடங்கள்
- அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள்
- மருத்துவமனைகள், சிறைச்சாலை, காவல் நிலையங்கள்

2. **வழக்காடு மன்றம் குறித்து கட்டுரை வரைக.**

ஏறத்தாழ பட்டிமன்றத்தின் சாயல் இதில் தென்பட்டாலும், வழக்குத் தொடுப்போர், மறுப்போர், நடுவர் ஆகிய மூவரை வைத்தே இந்நிகழ்ச்சி நடத்தப்படும்.

நடுவர் - நீதிபதியென அழைக்கப்படுவார். வழக்குத் தொடுப்போரும் மாண்புமிகு நீதிபதி அவர்களே! என்று தொடங்கி முறையீடு செய்வதும், மறுப்பதும் வழக்கம்.

எடுத்துக்காட்டாகப் பல அரங்குகளில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் ஒன்றை நோக்குவோம்.

*இராமன், வாலி மீது அம்பு தொடுத்தது குற்றமே!*

தொடுக்கப்பட்ட இந்த வழக்கின் காரணம் சரியாக இருந்தால் மனு ஏற்கப்படும். வழக்கு ஏற்கப்பட்டவுடன் குற்றம் சாட்டப்பட்டவர் இராமன் நிரபராதி என்பதை நிரூபிக்கப் போதுமான சாட்சிகளையும், காரணங்களையும் வைக்கவேண்டும்.

அவதார நோக்கத்திலிருந்து தவறிய வாலி புரிந்த தவறுகள், அவனுடைய ஒழுக்கக்கேடு, உண்மையை அறியாது அவனுடைய தம்பிக்கு அவன் இழைத்த கொடுமைகள், இராமனின் இரக்க குணத்தைப் பயன்படுத்தி தவறுசெய்த வாலி தப்பிக்க வழி ஏற்படக் கூடாது போன்ற காரணங்களுக்காக இராமன் மறைந்திருந்து அம்பெய்தியது நியாயமானதே என்று நியாயப்படுத்திப் பேசுவார்.



விலங்கினத்திற்குப் பிறன் மனையை உடைமையாக்கும் செயல் தவறல்ல என்று வாதி கூற, ஆதிமூலம் என்றழைத்த யானையும், சடாயு, ஜாம்பவான் ஆகியவையும் விலங்கு, பறவை இனத்தைச் சார்ந்தவையே. வாலி அறிவு பெற்றிருந்தவன். எனவே விலங்கு என்று அவனைக் குறிப்பிடுவது தவறு என வாதிட்டுக் காட்டுகிறார்.

**நீதிபதி**

அவதார நோக்கம் நிறைவேறவும் எந்தக் காரணத்துக்காக இராம, இராவண யுத்தம் நடக்க இருந்ததோ, அதே பிறன்மனையை விரும்பிய காரணத்தால் இராவணனை எச்சரிக்க வேண்டியும் தன் எதிரில் நின்று போரிடுவோரின் பலத்தில் பாதி வாலியைச் சேரும் என்ற வரத்தினாலும் வரம்பு மீறி நடந்தமையாலும், மறைந்திருந்து வாலி மீது அம்பெய்தியது குற்றமல்ல. எனவே இராமன் நிரபராதி என்று தீர்ப்புக் கூறினார்.

இதுபோன்றே கண்ணகி மதுரையை எரித்தது குற்றமே!

விபீஷணன், இராமனிடம் சேர்ந்தது குற்றமே!

மகனைப் படிக்க வைக்காத பெற்றோர் குற்றவாளிகளே!

போன்ற தலைப்புகளில் வழக்காடு மன்றங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

நீதி அரசரின் அரியணை, குற்றவாளிக்கூண்டு, வழக்கறிஞர் உடை போன்றவற்றோடு நீதிமன்றத் தோற்றத்தோடு வழக்காடு மன்றங்கள் சிறப்புற அமைகின்றன.

- - -